**2.2.2015**

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தென் கடலோர பகுதிகளில் இன்று மழைக்கு வாய்ப்பு**

தென் தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் ஆங்காங்கே திங்கள்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரி வித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: இலங்கை ஒட்டிய குமரிக் கடல் பகுதியில் வியாழக்கிழமை குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. இது சற்று மேற்கு நோக்கி நகர்ந்து லட்சத்தீவுகளுக்கு அருகில் நிலை கொண்டுள்ளது. இதனால், தென் தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் ஆங்காங்கே மழை பெய்யம் வாய்ப்புள்ளது. புதுச்சேரி, தமிழகத்தின் பிற இடங்களில் வறண்ட வானிலையே நிலவும். சென்னையைப் பொருத்தவரையில் வானம் மேகமூட்டமாக இருக்கும். மாநகரின் ஒரு சில பகுதிகளில் அதிகாலை நேரங்களில் மூடுபனி நிலவும். அடுத்து வரும் நான்கு நாள்களில் தென் தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் ஆங்காங்கே மழை பெய்யும் வாய்ப்புள்ளது. மீதமுள்ள மாவட்டங்களில் மிதமான வானிலை நிலவும் என தெரிவித்தனர்.

**இயற்கை விவசாயம்: பயிற்சிப் பட்டறை**

அவிநாசி அருகே தண்டுக்காரம்பாளையத்தில் இயற்கை விவசாயத்தின் அவசியம் குறித்த பயிற்சிப் பட்டறை ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுது. அவிநாசி தாகம், புளிம்பட்டி பசுமைப் பேராயம் ஆகிய அமைப்புகள் சார்பில், தண்டுக்காரன்பாளையத்தில், "இனி நீயும் உழவனே' என்ற தலைப்பில் கல்லூரி மாணவர்களுக்கு இயற்கை விவசாயம் குறித்த பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. இதற்கு, பசுமைப் பேராயம் அமைப்புத் தலைவர் சுந்தரம் தலைமை வகித்தார். செயலர் கோவிந்தராஜ்,

திருமுருகன்பூண்டி ரோட்டரி சங்க பட்டயத் தலைவர் முருகானந்தம், தாகம் அமைப்பு ஒருங்கிணைப்பாளர்கள் பிரபு, தீபக், பொருளாளர் விஜயவர்மன் ஆகியோர் பங்கேற்றனர். இதில், மாணவர்களுக்கு விவசாயம் குறித்த அடிப்படைக் கல்வி, இயற்கை விவசாயத்தின் அவசியம் குறித்த செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. இம்முகாமில் 70-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

## தூத்துக்குடியில் மீன்வளர்ப்புப் பயிற்சி முகாம்

தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மீன்வளச் சூழலியல் துறை மூலம் "மீன் வளர்ப்பில் நீர்தரப் பண்புகள் மற்றும் அதன் மேலாண்மை' என்ற தலைப்பில் பயிற்சி முகாம் பிப். 4இல் தொடங்கு கிறது. இதுகுறித்து மீன்வளக் கல்லூரி முதல்வர் கோ. சுகுமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு: ஹைதராபாதில் உள்ள தேசிய மீன்வள மேம்பாட்டு ஆணையம் நிதியுதவியுடன் இப் பயிற்சி முகாம் பிப். 4இல் தொடங்கி 3 நாள்கள் நடைபெறவுள்ளது. மீன் வளர்ப்போர், அலங்காரமீன் பண்ணையாளர்கள், இறால் பண்ணையாளர்கள், இறால் பண்ணையில் பணிபுரிவோர், இறால் வளர்ப்பில் ஆர்வமுள்ள ஊரக இளைஞர்கள் போன்றோர் பங்கேற்கலாம். பயிற்சியில், மீன் வளர்ப்பு, அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் இறால் வளர்ப்பில் நீர்தர மேலாண்மை பற்றிய பாடங்கள் செயல்முறை விளக்கங்களுடன் விரிவாக எடுத்துரைக்கப்படும். பங்கேற்க விரும்புவோர், "பேராசிரியர் மற்றும் தலைவர், மீன்வளச் சூழலியல் துறை, மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி - 628008' என்ற முகவரியில் தங்களது பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளலாம். தேர்வாகும் தகுதியானோருக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு 9095618230, 9443021339 ஆகிய செல்லிடப்பேசி எண்களைத் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**புதிய தொழில்நுட்பத்தில் வெள்ளரி சாகுபடி**

காஞ்சிபுரம்: தோட்டக்கலை துறையின், புறநகர் காய்கனி அபிவிருத்தி திட்டத்தின் கீழ், மணல் பயன்பாடு இல்லாமல் வெள்ளரி சாகுபடி அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. தமிழகத்தில், காய்கனிகள் விளைச்சல் பெருக, தோட்டக்கலை துறை சார்பாக, பல்வேறு வகையிலான தொழில்நுட்பங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறன. அந்த வகையில், முற்றிலும் மணல் பயன்பாடு இல்லாமல் தேங்காய் நார் கழிவைக் கொண்டு வெள்ளரி சாகுபடி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. தோட்டக்கலை புறநகர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், பசுமை குடில் அமைக்கவும், உரம் மற்றும் இதர செலவுகளுக்கு சேர்த்து, ஒரு ஏக்கருக்கு, 19,39,500 ரூபாய் தேவைப்படுகிறது. இதில், 9,35,000 ரூபாய், அரசு மானியமாக வழங்குகிறது. 170 நாள் கொண்ட இந்த சாகுபடியில், 50 நாட்களில்இருந்து அறுவடை செய்ய துவங்கலாம். ஒரு நாளைக்கு, ஒரு ஏக்கர் பரப்பளவில்இருந்து, 800 கிலோ வெள்ளரி இதன் மூலம் விவசாயிக்கு கிடைக்கும். இன்றைய சந்தை நிலவரப்படி, ஒரு கிலோ வெள்ளரி, 15 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. எனவே, இந்த சாகுபடி மூலம் விவசாயிகள் நல்ல லாபம் பெறலாம் என, தோட்டக்கலை துறை தெரிவிக்கிறது.

## 14 ஆண்டுகளுக்கு பின் நிரம்பும் துரை ஏரி:விவசாயிகள் முயற்சிக்கு கிடைத்த வெற்றி

ஓசூர்:ஓசூர் அடுத்த சூளகிரி அருகே அமைந்துள்ள துரை ஏரி, 14 ஆண்டுகளுக்கு பின்பு, கெலவரப்பள்ளி அணை தண்ணீர் மூலம் நிரம்பி வருவதற்கு, விவசாயிகளின் முயற்சியே காரணம் என, சூளகிரி பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர்.ஓசூர் அடுத்த சூளகிரியில், 50 ஏக்கர் பரப்பளவில், துரை ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரியின் நீர் ஆதாரம், அதன் அருகில் அமைந்துள்ள, மருதாண்டப்பள்ளி ஏரியை நம்பியுள்ளது. இதற்காக, மருதாண்டப்பள்ளி ஏரியில் இருந்து, துரை ஏரி வரை, கால்வாய் வெட்டப்பட்டது.ஆனால், 2001ம் ஆண்டுக்கு பின், மருதாண்டப்பள்ளி ஏரி நிரம்பிய நிலையிலும், துரை ஏரி நிரம்பவில்லை. இதற்கு காரணம், மருதாண்டப்பள்ளி ஏரியில் இருந்து, குறுகிய கால்வாய் மூலம், துரை ஏரிக்கு வரும் தண்ணீர், பட்டா நிலங்களில் வெளியேறி வந்ததால், அந்த நிலத்தின் உரிமையாளர்கள், தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். இதனால், துரை ஏரிக்கு வரும் தண்ணீர் நிறுத்தப்பட்டது.இதையறிந்த, சூளகிரி பகுதி விவசாயிகள், நில உரிமையாளர்களை தொடர்ந்து சமாதானம் செய்து, மருதாண்டப் பள்ளியில் இருந்து, குறுகிய கால்வாய் மூலம், துரை ஏரிக்கு தண்ணீர் செல்ல ஏற்பாடு செய்தனர். இந்நிலையில், கெலவரப்பள்ளி அணையில் இருந்து, கடந்த, 28ம் தேதி, இரண்டாம் போக பாசனத்திற்கு, தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால், மருதாண்டப்பள்ளி ஏரி நிரம்பியது. இதனால், தற்போது கால்வாய் மூலம் துரை ஏரிக்கு தண்ணீர் செல்ல துவங்கியுள்ளது. இது, விவசாயிகளை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது. கெலவரப்பள்ளி அணையில் இருந்து, மார்ச், 28 ம் தேதி வரை, தண்ணீர் திறந்து விடப்படுவதால், துரை ஏரி நிரம்பும் என, விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.சூளகிரி துரை ஏரி நிரம்பும் பட்சத்தில், அதன் அருகே

உள்ள, 15 ஆண்டுகளாக நிரம்பாத சின்னாறு அணைக்கு தண்ணீர் செல்ல வாய்ப்புள்ளது. இந்த அணைக்கு தண்ணீர் சென்றால், சூளகிரி, யோகிபுரம், காமநாயக்கன்பேட்டை, மைதாண்டப்பள்ளி, கிருஷ்ணேப்பள்ளி, தீரணப்பள்ளி, சென்னப்பள்ளி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள, 1,000 ஏக்கர் விவசாய நிலங்கள், பாசன வசதி பெறும் என, விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

## <u>மிளகாய் தோட்டத்தில் வெங்காய செடிகள்</u>

ஆர்.கே.பேட்டை: ஊடுபயிராக, மிளகாய் தோட்டத்தில் பயிரிடப்படும் வெங்காய செடிகள், தற்போது பூத்து குலுங்குகின்றன. கொய்மலர் போன்று கண்ணை கவரும் வெங்காய தாள் பயிரிடும் ரகசியம் குறித்து, விவசாயிகள் கூறியது சுவாரசியமானது. கரும்பு, நெல் உள்ளிட்ட பிரதான பயிர்களுடன், மிளகாய், கீரை, முள்ளங்கி உள்ளிட்ட தோட்டப் பயிர்களை, விவசாயிகள் ஊடுபயிராக செய்து வருகின்றனர். இதில், மிளகாய் முக்கிய இடம் பிடிக்கிறது. மிளகாய் தோட்டத்தின் பாத்தி வரப்புகளில் மக்காசோளம், வெங்காயம், முள்ளங்கி, கொத்தமல்லி உள்ளிட்டவையும் பயிரிடப்படுகின்றன. இந்த ஊடுபயிர்கள் அறுவடைக்காக மட்டுமின்றி, மிளகாய் செடிகளில் பூச்சிகளை கட்டுப்படுத்தவும், மகரந்த சேர்க்கையை ஊக்கப்படுத்தவும் பயிரிடப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். மிளகாய் செடிகளில் அதன் பூக்கள், இலைகளுக்கு அடியில் நிலத்தை நோக்கி இருக்கும். இதனால், மகரந்த சேர்க்கைக்காக தேனீக்களை கவர்ந்து இழுக்க, அழகிய பூக்களை கொண்ட, கொத்தமல்லி, வெங்காயம் உள்ளிட்டவை ஊடு பயிராக வளர்க்கப்படுகின்றன என, விவசாயிகள் தெரிவித்தனர். இதில், கீச்சலம் தெலுங்கு காலனி பகுதியில், மிளகாய் தோட்டத்தின் ஊடாக பயிரிடப்பட்டுள்ள வெங்காய செடிகள், கொய்மலர் போன்ற தனது பூக்களால், தேனீக்களை ஈர்த்து வருகின்றன.

## முட்டைகோஸ் விவசாயத்தில் சிறு விவசாயிகள் ஆர்வம்

கோத்தகிரி : கோத்தகிரி பகுதியில் தேயிலை விலைவீழ்ச்சியின் காரணமாக, முட்டைகோஸ் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். நீலகிரி மாவட்டத்தின் பிரதான விவசாயம் தேயிலை. பசுந்தேயிலைக்கு விலைவீழ்ச்சி, கடுமையான பனிப்பொழிவு காரணமாக, விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். தேயிலை விலை வீழ்ச்சியில் இருந்து, தங்களை பாதுகாத்துக்கொள்ள, விவசாயிகள் பொருளாதார நெருக்கடியிலும், மலைக்காய்கறி சாகுபடி செய்து வருகின்றனர். இதில், பனியால் பாதிப்பு ஏற்படாத முட்டைகோஸ், சாகுபடி செய்வதில் விவசாயிகள், அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில், அறுவடைக்கும் தயாராகும் வகையில், இவற்றை பாதுகாத்து வருகின்றனர்.

## குடகனாறு பகுதியில் புதிய தடுப்பணைகள்

வேடசந்தூர் : வேடசந்தூர் குடகனாற்றில், ஆத்துப்பட்டி அருகே புதிய தடுப்பணை அமைக்கும் பணி நடந்து வருகிறது. இதேபோல் லட்சுமணன்பட்டி அருகிலேயும் அணை கட்டுவதற்கான ஆய்வு பணி நடக்கிறது. ஆத்தூர் நீர்தேக்கத்தில் இருந்து தாடிக்கொம்பு - வேடசந்தூர் - அழகாபுரி வழியாக செல்லும் குடகனாறு, கரூர் காவிரி ஆற்றில் கலக்கிறது. வழியிடை கிராமமான அழகாபுரியில், குடகனாற்றை மறித்து அணை கட்டப்பட்டு நீர் தேக்கியுள்ளது. இப்பகுதியில் ஓரளவிற்கு நீர் பிடிப்பு உள்ளது. தாடிக்கொம்பு ஆத்துப்பட்டி அருகே, குடகனாற்றை மறித்து ரூ.ஆறு கோடியில் தடுப்பணை கட்டும் பணி நடக்கிறது. இதேபோல், நால்ரோடு பாலத்திற்கு தென்புறமும் தடுப்பணை கட்டுவதற்கான ஆய்வு பணிகள் நடந்துவருகிறது. இந்த அணைகள் கட்டப்பட்டால் தண்ணீர் தேக்கிவைக்கப்பட்டு, நிலத்தடி நீர்மட்டம்

உயரும். மக்களுக்கான குடிநீர் தேவைகளும் பூர்த்தி செய்யப்படும் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது.

## பருவமழை கை கொடுத்ததால் கீரை விளைச்சல்...

உழவர் சந்தைகளில் மலிவு விலைக்கு விற்பனை அதிகரிப்பு! நாமக்கல்:கீரை விளைச்சல் அதிகமாக உள்ளதால், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள உழவர்சந்தைகளில், மலிவு விலையில் விற்பனைக்கு வருகிறது.நாமக்கல் மாவட்டத்தில், வடகிழக்கு பருவ மழை ஓரளவு பெய்ததால், வறட்சியின் பிடியில் சிக்கியிருந்த விவசாயிகளுக்கு ஆறுதல் அளிக்கும்படியாக இருந்தது. இதனால், குறைந்து அளவு மழையை கொண்டு, குறுகிய கால பயிர்களான கீரை வகைகளை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். சிலவாரப் பயிர்களான சிறுகீரை, அரைக்கீரை, புளிச்சக்கீரை, பாலகீரை, கொத்தமல்லிகீரை, புதினாகீரை, லைன்கீரை, வல்லாரை கீரை, சர்கரவர்த்திகீரை, அகத்திகீரை உள்ளிட்ட கீரை வகைகளை அதிகமாக பயிரிட்டு வருகின்றனர். கீரை வகைகளை மக்கள் விரும்பி சாப்பிடுவதால், அதன் தேவையும் அதிகமாக உள்ளது.மாவட்டத்தின் மொத்த சராசரி மழையான, 716.5 மில்லி மீட்டரில், கடந்த, டிசம்பர் மாதத்தோடு, 601 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. இருந்தும், 115.5 மில்லி மீட்டர் மழை குறைவாகவே பெய்துள்ளது. நாமக்கல், திருச்செங்கோடு, ராசிபுரம், ப.வேலூர், மோகனூர், குமாரபாளையம் ஆகிய பகுதி உழவர் சந்தைகளில், அதிகளவு கீரை வகைகள் வரத்து உள்ளதால், விலையும் மலிவாக கிடைக்கிறது. தினசரி மார்க்கெட்டைவிட, உழவர்சந்தைக்கு அதிகளவு கீரைகள் வரத்து உள்ளதால், பொதுமக்களும் கீரையை வாங்கிச் செல்கின்றனர்.அதில், பாலகீரை, வல்லாரை, சர்க்கரவர்த்தி ஆகிய கீரைகள் கத்தை ஒன்று தலா, ஆறு ரூபாய், கொத்தமல்லி, அகத்தி, புதினா ஆகிய கீரைகள் கத்தை ஒன்று தலா, ஐந்து ரூபாய், மற்ற கீரைகள் கத்தை

ஒன்று தலா, நான்கு ரூபாய்க்கு விற்கப்பட்டது.நாமக்கல் உழவர் சந்தைக்கு, கோனூர், வள்ளிபுரம், வாழவந்தி, பாலப்பட்டி, கோடாங்கிப்பட்டி, எருமப்பட்டி, சேந்தமங்கலம், புதுச்சத்திரம், புதன்சந்தை ஆகிய பகுதிகளில் இருந்து, வழக்கமாக வரக்கூடிய இரண்டு முதல் மூன்று டன் கீரையை விட, ஏழு டன் கீரை விற்பனைக்கு வருகிறது.வேளாண் அதிகாரிகள் கூறியதாவது:மாவட்டத்தில், பயிர் சாகுபடியில், நெல், 9,157 ஹெக்டேர், சிறுதானியம், 89,235 ஹெக்டேர், பயிறு வகை, 16,784 ஹெக்டேர், எண்ணெய் வித்து, 30,230 ஹெக்டேர், பருத்தி, 1,899 ஹெக்டேர், கரும்பு, 13, 738 ஹெக்டேர் என, மொத்தம், 1,61,073 ஹெக்டேர் பரப்பில் சாகுபடி நடக்கிறது. இதில், கீரை வகைகள் ஊடுபயிராகவும், மானாவரியாகவும் சாகுபடி செய்யப்பட்டு, மார்க்கெட், உழவர்சந்தைக்கு விற்பனைக்கு வருகிறது. மழை மற்றும் பனி மூட்டத்தில், கீரை வகைகள் வளர்ச்சி அதிகமாக உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## <u>கலப்பு தீனித்தீவனம் தயாரிக்க பரிந்துரை செய்ய கோரிக்கை</u>

நாமக்கல்:"வைக்கோல், தட்டு, புரதச்சத்து மிகுந்த வேளாண் கழிவுகளைக் கொண்டு, கலப்பு தீனித்தீவனம் தயாரிக்க ஆய்வு மேற்கொள்ள பரிந்துரை செய்ய வேண்டும்' என, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச்சங்க பொதுச்செயலாளர் ராஜேந்திரன், நாமக்கல் மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தியிடம் மனு அளித்தார்.மனுவில் கூறியிருப்பதாவது: கால்நடை கலப்புத் தீவனத்துக்கான மூலப்பொருட்களான தவிடு, புண்ணாக்கு, தானிய வகைகளைக் கொண்டு, சரிவிகித அளவில் கால்நடைகளுக்கு, அடர் கலப்புத் தீவனம் தயாரிக்கப்படுகிறது. அதுபோல், வைக்கோல், தட்டு, புரதச்சத்து மிகுந்த தீவனப் பயிர்கள் மற்றும் வேளாண் பயிர் கழிவுகளைக் கொண்டு, தீனித்தீவனம் தயாரிப்பதற்கான ஆய்வுகளை மேற்கொள்ள, நாமக்கல் கால்நடை

மருத்துவனை மற்றும் அறிவியல் பல்கலைக்கு பரிந்துரை செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**<u>வாழை ரகங்களை புதுப்பிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம்</u>**

நாமக்கல்: வாழை ஆராய்ச்சி நிறுவன மேலாண் இயக்குனர் அஜிதன் கூறியதாவது:தமிழகத்தில் பூவன், கற்பூரவள்ளி, கதளி, பேயன் போன்ற வாழை ரகங்களை, தொன்று தொட்டு பயிரிடப்படுவதால், நோய் தாக்கம் ஏற்பட்டு, அதன் விளைவிக்கும் தன்மையை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறது. அவற்றை புதுப்பிக்க, தமிழ்நாடு வாழை உற்பத்தியாளர் நிறுவனம், தேசிய வேளாண் நிறுவனத்தோடு புரிந்துணர்வு ஒப்பந்தமிட்டு, திசு வளர்ப்பு தொழில் நுட்பத்தில் கன்றுகளை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு வழங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், கடந்த, 30ம் தேதி, மதுராந்தகம் அருகே உள்ள இல்லீடு கிராமத்தில் நடந்தது.மத்திய ஊரக வளர்ச்சி கழக இயக்குனர் ராவ், தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் ராமசாமி, தென் மண்டல வேளாண் அறிவியல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ஸ்ரீசந்பீக்சிர் ஆகியோர் பங்கேற்றனர். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், தேசிய வேளாண் நிறுவன செயல் இயக்குனர் ராமசுப்ரமணியன், வாழை ஆராய்ச்சி நிறுவன மேலாண் இயக்குனர் அஜிதன் ஆகியோர் கையெழுத்திட்டனர்.அதன் மூலம், தேசிய வேளாண் நிறுவனம், பாரம்பரிய வாழை ரகங்களை திசு வளர்ப்பு தொழில் நுட்பத்தில் தயாரித்து, வாழை உற்பத்தியாளர் நிறுவவத்துக்கு வழங்க முன் வந்துள்ளது. வர்த்தக நிறுவனங்களும், அரசு ஆராய்ச்சி நிலையங்களும், இதுநாள் வரை இம்முயற்சியை மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.முன்னாள் மத்திய நிதி அமைச்சர் சி.சுப்ரமணியத்தின், 105வது பிறந்த நாள் விழாவில், இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இவ்வாறு அவர் கூறினார்.

## நிரந்தர நெல் கொள்முதல் நிலைய குடோன்களுக்கு கலெக்டர் ஏற்பாடு; கூட்டத்தில் முடிவு

சிவகங்கை : "மாவட்டத்தில் நிரந்தரமாக 50 நெல் கொள்முதல் நிலைய குடோன்கள் அமைக்க நுகர்பொருள் வாணிப கழகம் முயற்சிக்க வேண்டும்," என கலெக்டர் முனுசாமி தெரிவித்தார். மாவட்டத்தில் செயல்படும் நுகர்பொருள் வாணிப கழக நெல் கொள்முதல் நிலைய அலுவலர், ஊழியருக்கான ஆலோசனை கூட்டம் நடந்தது. கலெக்டர் முனுசாமி தலைமை வகித்தார். மண்டல முதுநிலை மேலாளர் சிவராமன் முன்னிலை வகித்தார். மேலாளர் (தரம்) ஜவஹர் நூர்ராணி, துணை மேலாளர்கள் (கணக்கு) செந்தில்குமார், (தரம்) அன்பரசு, கண்காணிப்பாளர் (வணிகம்) சத்தியமூர்த்தி ஜெயகுரு உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர். கலெக்டர் பேசுகையில்,டெல்டா மாவட்டங்கள் போன்றே சிவகங்கையில் 50 இடங்களில் நிரந்தர நெல் கொள்முதல் நிலைய குடோன்களுக்கான கட்டடம் கட்ட நுகர்பொருள் வாணிப கழகம் முயற்சிக்க வேண்டும். இதற்கான இடங்களை அரசு ஒப்புதலுடன் மாவட்ட நிர்வாகம் வழங்கும். நுகர்பொருள் வாணிப கழகத்திடம் நிதியை பெற்று குடோன் கட்டலாம். வியாபாரிகள் தலையீடின்றி நுகர்பொருள் வாணிப கழக அதிகாரிகள் பார்த்துக் கொள்ள வேண்டும். விவசாயிகளை, வியாபாரிகள் ஏமாற்றிவிடாத வகையில் நெல்லுக்கு உரிய விலை கிடைக்க செய்ய வேண்டும்.கொள்முதல் நிலையம் இல்லாத இடங்களில் விவசாயிகள் எளிதாக நெல்லை எடுத்து வர நடமாடும் நிலையம் செயல்படுத்த வேண்டும். வேளாண்துறையினர் 3.20 லட்சம் டன் நெல்வரத்து இருக்கும் என்கின்றனர். ஆகையால் நெல் கொள்முதல் இலக்கை ஒரு லட்சத்தில் இருந்து 1.50 லட்சம் டன்னாக அதிகரிக்க வேண்டும், என்றார்.

**<u>கால்நடைகளுக்கு தண்ணீர் தொட்டி மானாமதுரையில் தயாரிப்பு தீவிரம்</u>**

மானாமதுரை : கோடையில் கால்நடைகளுக்கு தாகம் தீர்க்க தண்ணீர் தொட்டி தயாரிப்பு பணி மானாமதுரையில் தீவிரமடைந்துள்ளது. விவசாயிகளின் வாழ்வாதாரம் கால்நடைகள் தான். விவசாயம் கை கொடுக்காவிட்டாலும் கால்நடை வளர்ப்பின் மூலம் வருமானம் ஈட்டுவது விவசாயிகளின் வழக்கம்.கோடையில் நீர்நிலைகள் வறண்டு விடுவதால் கால்நடைகளுக்கு தண்ணீர் கிடைப்பது சிரமம். பகல் முழுவதும் மேய்ச்சலுக்கு செல்லும் கால்நடைகள் மாலையில் வீடு திரும்பியவுடன் தண்ணீரைச் தேடி செல்லும். இதற்காக மண்ணால் ஆன தொட்டிகள் பல்வேறு அளவுகளில் தயாரிக்கப்படுகிறது. 30 லிட்டர்,40 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டிகளை கால்நடை வளர்ப்பவர்களுக்காக இங்குள்ளவர்கள் தயாரிக்கின்றனர். தொட்டி அளவிற்கு ஏற்ப ரூ.200 முதல் 400 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர். விவசாயி கர்ணன் கூறுகையில்: ஆடு,மாடுகளுக்கு பிளாஸ்டிக் பொருட்களில் தண்ணீர் வைத்தால் ஒரு சில நாட்கள் மட்டுமே குடிக்கும். அதன் பின் அதில் வாய் வைக்காது. மண் தொட்டியை தரையில் குழி தோண்டி வைத்து விடுவோம்.காடுகளில் தண்ணீர் குடிப்பதை போல ஆடு,மாடுகள் குடித்து தாகம் தணிக்கும், என்றார்.

**<u>கனகாம்பரம் பூக்களுக்கு சந்தையில் வரவேற்பு</u>**

தர்மபுரி:கனகாம்பரம் பூக்களுக்கு, விலை கிடைத்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தர்மபுரி மாவட்டத்தில், தோட்டக்கலை பயிர்களான மல்லி, கனகாம்பரம், முல்லை உள்ளிட்ட மலர்கள் மற்றும் முட்டைகோஸ், காளிஃபிளவர், அவரை உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மலர் சாகுபடியில், விவசாயிகளுக்கு தினமும் வருமானம் கிடைப்பதால், தர்மபுரி மாவட்டத்தில், பாலக்கோடு, பென்னாகரம், மாரண்டஹள்ளி, தொப்பூர், பஞ்சப்பள்ளி உள்ளிட்ட பல பகுதிகளில் அதிகளவில் விவசாயிகள் செண்டுமல்லி, சம்பங்கி, மல்லி, கனகாம்பரம் ஆகிய மலர்களை சாகுபடி செய்துள்ளனர்.தற்போது, சந்தையில், கனகாம்பரம் பூக்களுக்கு தொடர்ந்து வரவேற்பு உள்ளதாலும், போதிய விலை கிடைத்து வருவதாலும், விவசாயிகள், அதிகளவில், கனகாம்பரத்தை சாகுபடி செய்து வருகின்றனர். கோவில் திருவிழா, திருமண சீஸன் நடந்து வருவதால், கனகாம்பரம் பூக்களுக்கு வரவேற்பு கிடைத்து வருகிறது. ஒரு கிலோ கனகாம்பரம், 250 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யப்பட்டு வருவதால், சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.இதுகுறித்து, விவசாயிகள் கூறியதாவது:தர்மபுரி மாவட்டத்தில், சில ஆண்டுகளாக பருவமழை பெய்யாததால், வறட்சி நிலவி வருகிறது. இதன் காரணமாக, பிரதான பயிர்களை சாகுபடி செய்ய முடியாமல், விவசாயிகள் கவலையில் உள்ளனர். இதனால், குறைந்த தண்ணீர் வசதியில், போதிய விலை கிடைக்க கூடிய மலர் சாகுபடியில் ஆர்வம் காட்ட துவங்கியுள்ளனர். கனகாம்பரம் பூக்களுக்கு, ஆண்டு முழுவதும் சீரான விலை கிடைத்து வருவதால், தர்மபுரி மாவட்ட விவசாயிகள், கனகாம்பரம் பூக்களை சாகுபடி செய்து வருகின்றனர். தற்போது, திருமண சீஸன் மற்றும் திருவிழாக்கள் அதிகளவில் நடப்பதால், கனகாம்பரம் பூக்களுக்கு சந்தையில் வரவேற்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நுகர்வு அதிகரிப்பால் கறிக்கோழி கிலோவிற்கு ரூ.5 உயர்வு



கோவை: தமிழகத்தில் சில்லரையில் விற்பனை செய்யப்படும் கோழிக்கறி கடைகளில் கடந்த 22ம் தேதி தோலுடன் கறி ரூ.110 ஆகவும், தோல் நீக்கிய கறி ரூ.125 ஆகவும் விற்பனை செய்யப் பட்டது. பின்னர் 26ம் தேதி குடியரசு தினம் அன்று விடுமுறை என்பதால் கோழிக்கறி நுகர்வு அதிகரித்தது. இதன் காரணமாக அதன் விலை தோலுடன் கறி ரூ.115 ஆகவும், தோல் நீக்கிய கறி ரூ.130 ஆகவும் உயர்ந்தது. இந்நிலையில் நேற்று (முதல் தேதி) தோல் நீக்கிய கறி ரூ.135 ஆகவும் உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டது. பண்ணை கொள்முதல் விலை உயிருடன் கறிக்கோழி கிலோவும் ரூ.72 ஆகவும் உயர்ந்துள்ளது. கறிக்கோழி நுகர்வு தொடர்ந்து அதிகரித்து வருவதால், விலை உயர்ந்து வருகிறது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

### பயிர் சாகுபடிக்கு ஏற்ப உரம் இருப்பு வைக்க வேண்டும் மாவட்ட ஆட்சியர் உத்தரவு

விழுப்புரம், : பயிர் சாகுபடிக்கு ஏற்ப உரம் இருப்பு வைக்க வேண்டும் என விழுப்புரம் ஆட்சியர் சம்பத் உத்தரவிட்டுள்ளார். விழுப்புரம் மாவட்டத் தில் அடுத்த சாகுபடி பருவத்திற்கு தேவையான யூரியா, உரம் தேவை குறித்த ஆய்வுக்கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் நடந்தது. ஆட்சியர்

சம்பத் தலைமை தாங்கினார். பயிர் சாகுபடி பரப்பு அதிகரித்து வருவதாலும், பருவமழை பரவலாக பெய்யும் பட்சத்தில் உரம், யூரியா தேவை அதிகரித்து வருகிறது. இக்கூட்டத்தில் வட்டாரம் வாரியாக அடுத்த சாகுபடிக்கு தகுந்தவாறு தேவையான யூரியா, உரம் இருப்பு குறித்து ஆட்சியர் சம்பத் ஆய்வு செய்தார். போதிய அளவு இருப்பு வைக்கவும் உத்தரவிட்டார். மேலும் தேவையான யூரியா, உரத்தை அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் பயிர் சாகுபடிக்கு ஏற்றவாறு முன்கூட்டியே இருப்பில் வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆட்சியர் சம்பத் கேட்டுக்கொண்டார். கூட்டத்தில் வேளாண்மை துணை இயக்குநர் ரத்தினசபாபதி, ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) ஆறுமுகம், வேளாண்மை உதவி இயக்குநர்(தரக்கட்டுப்பாடு) ராமசாமி, வேளாண்மை அலுவலர் கதிரேசன், வேளாண்மை உதவி இயக்குநர்கள், கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர்கள் உள் ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## <u>தாளவாடி மலைப்பகுதியில் மானாவாரி மக்காச்சோள சாகுபடி பரப்பு அதிகரிப்பு</u>

சத்தியமங்கலம், : தாளவாடி, கடம்பூர் மலைப்பகுதியில் உள்ள பெரும்பான்மையான கிராமங்களில் மக்காச்சோளம் சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளது. சத்தியமங்கலம் அடுத்துள்ள தாளவாடி, கேர்மாளம் பகுதியில் தொடர் மழை பெய்துள்ளதால் விவசாயிகள் நவம்பர் மாத இறுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் மக்காச்சோளம் விதைத்தனர். 3 மாதப்பயிரான மக்காச்சோளம் நன்கு வளர்ந்து கதிர் வெளிவரும் தருவாயில் காணப்படுகிறது. தலமலை, மல்லன்குழி, கோடிபுரம், நெய்தாளபுரம், தொட்டபுரம், திகினாரை, சிக்கள்ளி உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் மானாவாரி மக்காச்சோளம் சாகுபடி அதிகரித்துள்ளது. மக்காச்சோளத்தில் இருந்து மாவு, மருந்து பொருள்கள் தயாரிக்கவும் கால்நடைகளுக்கு தீவனமாகவும் குறிப்பாக

கோழிகளுக்கு முக்கிய தீவனமாகவும் உள்ளது. கோதுமைக்கு அடுத்தப்படியாக அதிக புரதச்சத்து அடங்கிய தானியப்பயிரான மக்காச்சோளம் ஏக்கர் ஒன்றுக்கு மகசூல் 10 குவின்டால் வரை கிடைக்கிறது. ஆனால், ஜனவரி மாத துவக்கத்தில் மழையளவு குறைந்து பனிப்பொழிவு ஏற்பட்டதால் பயிர் வாடத்துவங்கியது. இருப்பினும் அதன் உற்பத்தி பாதிக்கப்படவில்லை. இது குறித்து மல்லன்குழி விவசாயி மாதேஸ்வரா கூறியதாவது: மக்காச்சோளம் வறட்சியை தாங்குவதுடன், குறைவான நீர்ப்பாசனத்தில் வளரக்கூடியது. மலைப்பகுதியில் நல்ல மழை பெய்து பயிர் செழிப்புடன் வளர்ந்துள்ளதால் அதிக மகசூல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பால் பிடிக்கும் தருணத்தில் மழை பெய்திருந்தாலும் கூட மகசூல் பாதிக்கப்படவில்லை. குவின்டால் ஒன்றுக்கு ரூ.1300வரை விலை கிடைக்கிறது, என்றார்.

## தேயிலை மகசூல் குறைவு எதிரொலி ஏல மையங்களில் விற்பனை அதிகரிப்பு

குன்னூர், : நீலகிரி மாவட்டத்தில் கடந் தாண்டு எதிர்பார்த்தது போல் மழை பெய்ததால் குடிநீர் பிரச்னை ஓரளவு தீர்ந்தது. மேலும் தேயிலை மகசூலும் அதிகரிக்க துவங்கியது. இதனால் விவசாயிகளும் மகிழச்சி அடைந்தனர். இந்நிலையில் கடந்த ஒரு மாதமாக பனியின் தாக்குதல் அதிகரித்ததால் சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலான தேயிலை செடி கள் கருகியது. குன்னூர், கொலக்கம்பை, சேலாஸ், காட்டேரி, கேத்தி உள் ளிட்ட பகுதிகளில் இதன் பாதிப்பு அதிகளவில் ஏற்பட்டுள்ளது. அதே போல் கடந்த சில நாட்களாக நீர்ப்பனி பொழிவு அதிகரித்துள்ளது. மேலும் பகல் நேரத்தில் வெயிலின் அளவு குறைந்து, மேகமூட்டம் அதிகரித்து வருவதாலும் தேயிலை செடிகளில் கொப்பள நோய் ஏற்பட்டுள்ளது. இது போன்ற காரணங்களால் தேயிலை மகசூல் வெகு வாக குறைய துவங்கி உள் ளது. கடந்தாண்டு இறுதி யில் தான் தேயிலை மகசூல் அதிகரித்தது. அதன் பின் னர் மகசூல் குறைந்து வருவதால்

விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். மேலும் ஏல மையங்களில் பல்வேறு காரணங்களால் தேயிலை தூள் விற்பனை குறைந்ததுடன் அதன் விலையும் சரிந்து வந்தது. இதனிடையே தற்போதுள்ள குளிர்கால தேயிலை தூளுக்கு வர்த்தகர்கள் மத்தியில் அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதால் தேயி லை தூளின் விலையும் அதன் விற்பனையும் அதிகரிக்க துவங்கி உள்ளது. மேலும் தேயிலை மகசூல் குறைவால் பெரும்பாலான தனியார் தேயிலை தொழிற்சாலைகளில் வாரத்திற்கு 3 நாட்கள் மட்டுமே தேயிலை உற்பத்தியை மேற்கொள் ளும் நிலை உருவாகி உள் ளது. இதே நிலையில் டான்டீ மற்றும் அரசு கூட்டுறவு ஆலைகளும் இருப்பதால் இதனை சார்ந்த தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## காய்கறி செடிகளை தாக்கும் பூச்சியை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு பயிற்சி

கிருஷ்ணராயபுரம், : கிருஷ்ணராயபுரம் வட்டார தோட்டக்கலை துறை மற்றும் வேளாண்மை அறிவியல் மையம் சார்பில் காய்கறி செடிகளில் பூச்சிநோய்களை கட்டுப்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. கிருஷ்ணராயபுரம் பகுதியில் காய்கறி சாகுபடி விவசாயிகளுக்கு கத்தரி, தக்காளி, வெண்டை, கொடி வகை காய்கறி பயிர்களை தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்தும் முறைகள், விளக்கு பொரி அமைத்தல், மஞ்சள் வண்ண ஒட்டுபொறி, ஒட்டுண்ணி அட்டை கட்டுதல் (சூரிய ஒளிவிளக்கு பொரி பற்றியும்) விவசாயிகளுக்கு விளக்கிக் கூறப்பட்டது. மேலும் அதிக நச்சுள்ள மோனோ குளோரோட்டா பாஸ் மற்றும் செயற்கை பைரிட்ராய்டு வகையுள்ள மருந்துகளை தெளித்து கட்டுப்படுத்துவது உடல் நலத்திற்கு கேடு, எனவே இயற் கை முறையில் இலைகளை கொண்டு (நொச்சி, ஊமத்தை, எருக்கு, புங்கல்) பூச்சி விரட்டி தயாரித்து அவைகளை கொண்டு தெளித்தால் நன்மை தரக் கூடியது என்றும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினர். பயிற்சியில் வேளாண் அறிவியல் நிலைய திட்ட

ஒருங்கிணைப்பாளர் திரவியம் பயிற்சி அளித்தார். விவசாயிகளுக்கு மண்வளம் குறித்தும், மண் ஆய்வு குறித்தும் மண் மாதிரி சேகரித்தல் பற்றி திட்ட உதவியாளர் கருப்பசாமி, காய்கறி சாகுபடி குறித்து கிருஷ்ணராயபுரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் கலா பயிற்சி அளித்தனர். இப்பயிற்சியில் பஞ்சப்பட்டி பகுதியை சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏற்பாட்டினை வேளாண் உதவி அலுவலர்நசீர்செய்திருந்தார்.

**<u>அரியலூரில் மேலும் 14 இடங்களில் நெல் கொள்முதல் நிலையம்</u>**

அரியலூர், : விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று அரியலூர் மாவட்டத்தில் மேலும் 14 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என கலெக்டர் தெரிவித்தார். அரியலூர் கலெக்டர் சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில்: அரியலூர் மாவட்டத்தில் 2014-15ம் ஆண்டில் நடப்பு சம்பா சாகுபடியில் 57 ஆயிரத்து 205 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப் பட்டு கதிர்கள் முற்றும் தருணம் முதல் அறுவடை தருணம் வரை உள்ளது. தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில், நெல் நடவு இயந்திரம் மூலம் நடவு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ. 1,500 வீதம் 680 ஹெக்டேருக்கு இயந்திர நெல் நடவு செய்ய இலக்கும் நிர்ணயம் செய்யப்பட்டு ரூ. 10.2 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது சம்பா பருவத்தில் நடைபெறும் அறுவடையை முன்னிட்டு இம் மாவட்ட விவசாயிகள் சார்பில் நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டு இருந்தது. இதையடுத்து, கடந்த 21ம் தேதி முதல் அரியலூர் தாலுகாவில் தூத்தூர், குருவாடி, ஏலாக்குறிச்சி, இலந்தைக்கூடம், கீழக்கொளத்தூர், காமரசவள்ளி ஆகிய கிராமங்களிலும், ஜெயங்கொண்டம் தாலு காவில் முட்டுவாஞ்சேரி, கோடாலிக்கருப்பூர், கங்கைகொண்ட சோழபுரம், தா.பழூர், வாழைக்குறிச்சி ஆகிய 11 கிராமங்களில் நேரடி நெல் கொள்முதல்

நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது கூடுதலாக அரியலூர் தாலுகாவில் திருமழபாடி, கீழக்காவட்டான்குறிச்சி, விழுப்பனாங்குறிச்சி, பளிங்காநத்தம், விளாகம், ஓரியூர், வெங் கனூர், கோவில்எசனை, கரைவெட்டி, கள்ளூர் ஆகிய கிராமங்களிலும், உடையார்பாளையம் தாலுகாவில் காரைக்குறிச்சி, ஸ்ரீபுரந்தான், பெரியாத்துக்குறிச்சி ஆகிய கிராமங்களிலும், செந்துறை தாலுகாவில் ஆர்.எஸ்.மாத்தூர் கிராமத்திலும் என மொத்தம் 14 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் நேற்று முதல் செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, விவசாய பெருமக்கள் அருகில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை பயன்படுத்தி பயன்பெறுமாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## <u>பயறு வகைகளை சாகுபடி செய்தால் அதிக லாபம் உழவர் பயிற்சி நிலையம் தகவல்</u>

அன்னவாசல், : அன்னவாசல் அருகே குடுமியான் மலை உழவர் பயிற்சி நிலையம் சார்பில் விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி முகாம் நடத்தப் பட்டது. முகாமை புதுக் கோட்டை வேளாண் இணை இயக்குநர் ஷாஜ ஹான் துவக்கிவைத்து பேசுகையில், தற்போது மழை குறைவாகப் பெய்துள்ளதால் தண்ணீர்த் தேவை குறை வாகக் கொண்ட பயிர்களான உளுந்து, கடலை போன்றவற்றை விவசாயிகள் சாகுபடி செய்தால் குறைவான நாட்களில் கூடுதல் லாபம் பெறலாம். மேலும் அம்மா பண்ணை உறுப்பினர்கள் நவீன தொழில்நுட்பங்களை தாங்கள் அறிந்துகொள்வ தோடு தங்கள் பகுதியில் உள்ள மகளிர் விவசாயிகளு க்கும் தெரிவிக்க வேண்டும் என்றார். முன்னிலை வகித்துப் பேசிய குடுமியான் மலை உழவர் பயிற்சி நிலையத் துணை இயக்குநர் சாந்தி, பயிற்சியில் வழங்கப்படும் தொழில்நுட்பக் கருத்துகளை விவசாயிகள் தவறாது கடைப்பிடித்து கூடுதல் மகசூல் பெறுமாறு கேட்டுக்கொண்டார். முகாமில் படக்காட்சிகள் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண்

அலுவலர் ராஜசேகரன், திருமயம் வேளாண் உதவி இயக்குநர் ராமமூர்த்தி, மத்திய திட்ட வேளாண் அலுவலர் ஜெகதீஸ்வரி ஆகியோர் பேசினர். பயிற்சி முகாமில் பங்கேற்ற விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. முடிவில் வேளாண் அலுவலர் ராஜசேகரன் நன்றி கூறினார்.

**<u>பயிர் இன்சூரன்ஸ் இழப்பீடு விநியோகம்</u>**

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் கடந்த 2012ம் ஆண்டில் விடுபட்ட 12 கிராமங்களுக்கான பயிர் இன்சூரன்ஸ் இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளதாக மேம் பட்ட தேசிய வேளாண் காப் பீடு திட்ட தலைமை மண்டல மேலாளர் பாரதி வஜ்ஜிரவேலு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளி யிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது, “ 2012 ம் ஆண்டில் பாதிக்கப்பட்ட 54ஆயிரத்து 136 விவசாயிகளுக்கு ரூ.34 கோடியே 50 லட்சம் 2013ம் ஆண்டில் இழப்பீடாக வழங்கப்பட்டது. இந்த இழப்பீடு வழங்குவதில் எழுநூற்று மங்கலம், களத்தூர், கீளங்காட்டூர், கீழபட்டமங்கலம், மாங்குளம், மேலநெட்டூர், மேலபட்டமங்கலம், மேலப்பிடாவூர், பி.ஆலங்குளம், எஸ்.காரைக்குடி, சிறுவாத்தி, திருவேலங்குடி ஆகிய 12 கிராமங்கள் விடுபட்டன. தற்போது இந்த கிராமங்களை சேர்ந்த ஆயிரத்து 940 விவசாயிகளுக்கு ரூ. ஒரு கோடியே 40லட்சம் இழப்பீட்டு தொ கையாக அவரவர் வங்கி கண க்கின் மூலமாக செலுத்தப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட விவசாயிகள் தங்களது வங்கி கணக்கில் இழப்பீடு தொகை குறித்து சரிபார்த்துக்கொ ள்ளவும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>சிறுதானிய சாகுபடி பயிற்சி முகாம்</u>**

திருச்சுழி, : திருச்சுழி அருகே விவசாயிகளுக்கான சிறுதானிய சாகுபடி மற்றும் மதிப்பூட்டுதல் பயிற்சி நடைபெற்றது. திருச்சுழி அருகே பொம்மகோட்டை கிராமத்தில் சிறுதானிய உற்பத்தி மற்றும்

மதிப்பூட்டுதல் பயிற்சி முகாம் நடைபெற்றது. ஊராட்சி மன்றத் தலைவர் சந்திரசேகர் தலைமை வகித்தார். விருதுநகர் வே ளாண்மை துணை இயக்குநர்(மத்திய திட்டம்) பூவலி ங்கம் முன்னிலை வகித்தார். எம்.ரெட்டியபட்டி வேளாண்மை உதவி இயக்குநர் நாச்சியார் அம்மாள், அருப்புக்கோட்டை நோயியல்துறை உதவி பேராசிரியர் மாரீஸ்வரி, நார்த்தம்பட்டி இயற்கை விவசாயி சீத்தாராமன் ஆகியோர் சிறு தானிய சாகுபடி முறைகள் குறித்து விளக்கினர். பயிற்சியில் 50க்கும் மேற்பட்ட சிறுதானியம் சாகுபடி செய்யும் விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் சந்திரசேகர், ஜெயபாண்டியன் மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் முத்துகருப்பன் ஆகியோர் செய்திருந்தனர்.

## <u>*தீவிர காய்கறி சாகுபடிக்கான நவீன தொழில்நுட்ப பயிற்சி*</u>

புதுச்சேரி, : புதுச்சேரி அரசு வேளாண் துறை ஆத்மா திட்டத்தின் மூலம் விவசாயிகளை குழுக்களாக ஒருங்கிணைத்து அவர்களுக்கு பல்வேறு தொழில்நுட்ப பயிற்சிகளை திறன்வளர்ப்பு பயிற்சி முகாம் மற்றும் கல்வி சுற்றுலா மூலம் அளித்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக வில்லியனூர் பண்ணை தகவல் மற்றும் ஆலோசனை மையம் சார்பாக கீழ்சாத்தமங்கலத்தில் தீவிர காய்கறி சாகுபடியில் நவீன தொழில்நுட்பங் கள் என்ற தலைப்பில் பண்ணை பள்ளிக்கான துவக்க விழா நடந்தது. காய்கறி சாகுபடி செய்து நல்ல மகசூலை பெற்ற புண்ணியக்கோடி என்ற விவசாயி பண்ணை பள்ளியினை வழி நடத்துகிறார். அவர் பின்பற்றிய தொழில்நுட்பங்களை மற்ற விவசாயிகளுக்கும் பரவலாக்கும் பொருட்டு ஒவ்வொரு வகுப்பிலும் பல்வேறு தொழில் நுட்பங்கள் குறித்த செயல் விளக்கமும் நடந்து வருகிறது. இந்த பண்ணை பள்ளியின் துவக்க விழாவில் சிறப்பு அழைப்பாளராக கூடுதல் வேளாண் இயக்குனர் மற்றும் ஆத்மா திட்ட இயக்குனருமான ரவிக்குமார் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி விவசாயிகளுக்கு காய்கறிகளை வழங்கினார். வில்லியனூர் கோட்ட துணை வேளாண் இயக்குனர் முருகேசன்

கலந்துகொண்டு பேசினார். வில்லியனூர் உழவர் உதவி வேளாண் அலுவலர் மற்றும் ஆத்மா திட்ட அமைப்பாளர் மாசிலாமணி வரவேற்றார். பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலைய பூச்சியியல் வல்லுநர் விஜயகுமார் மற்றும் மனையியல் துறை விஜயலட்சுமி பங்கேற்று காய்கறி உற்பத்தி செய்வதன் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தனர். நிகழ்ச்சியில் கீழ்சாத்தமங்கலம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை வில்லியனூர் உதவி வேளாண் அலுவலர் ராமசாமி மற்றும் விரிவாக்க அலுவலர் நடேசன் செய்திருந்தார். ஆத்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் சாந்தி நன்றி கூறினார். பங்கேற்ற அனைத்து விவசாயிகளுக்கும் தக்காளி, வெண்டை, கத்திரி, பீர்க்கன், அவரை, முள்ளங்கி விதைகள் வழங்கப்பட்டன.

**<u>விவசாயிகளுக்கு மானியத்தில் உரம் வழங்க நடவடிக்கை</u>**

புதுச்சேரி, : புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளர் எம்எஸ் சுப்பிரமணியன் வெளியிட்டுள்ள அறிக்கை: புதுச்சேரி அரசு விவசாய மேம்பாட்டுக்கான பணிகளை மேற்கொள்ளாமல் தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. விவசாய நிலங்களை மனைகளாக பிரித்து விற்பனை செய் வதை முறைப்படுத்தாதது, உரிய நேரத்தில் பயிர் செய்வதற்கான விதைகள், உரங்கள் கிடைப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை. இவ்வளவு போராட்டத்துக்கு இடையில் விவசாயிகள் பயிர் செய்து இயற்கை பேரழிவால் பாதிக்கப்படும்போது அவர்களுக்கு தேவையான நிவாரணத்தை வழங்காமல் இருந்து வருகிறது. இதனால் விவசாயிகள் விவசாயத்தை மேற்கொள்ளாததன் மூலம் மனித சக்தி வீணாக்கப் பட்டு வருகிறது. அதனால் விவசாய நிலங்களும் தரிசு நிலங்களாக மாற்றப்பட்டு வருகிறது. இவைகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளில் அரசு உடனடியாக ஈடுபட வேண்டும். புதுச்சேரி வேளாண் துறையில் உள்ள தோட்டக் கலை மூலம் தைப் பட்டம் தொடங்குவதற்கு முன்பு

விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் மிளகாய், கத்தரி, வெண்டை போன்ற காய்கறிகளின் விதைகள் கொடுக்கப்படும். அத்துடன் நல்ல முறையில் விவசாயம் செய்ய நுண்ணூட்ட உயிர் உரங்களான பாஸ்போ பாக்டீரியா, சூடாமோனஸ், அசோஸ் பயிரில்லம், நீல பச்சைப்பாசி, கம்போஸ்ட் உரம், வேப்பம் புண்ணாக்கு, வேம்பு எண்ணை போன்றவைகளும் வழங்கப்படும். ஆனால் இந்த ஆண்டு இவை அனைத்தும் தை பிறந்து மூன்று வாரங்களாகியும் வழங்கவில்லை. உடனடியாக அரசு ஏற்கனவே விதை, உரம் வழங்கிய நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய பணத்தை செலுத்த வேண் டும். புதியதாக உரம், விதை களை அந்நிறுவனத்திடமோ, மாற்று நிறுவனத்திடமோ வாங்கி விவசாயிகளுக்கு முழு மானியத்தில் வழங்கி விவசாயம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கூறியுள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>பெண்களுக்கு மூலிகை பயிற்சி</u>**



மதுரையை அடுத்த அழகர்கோவில் மலை தீர்த்தக்கரையில் மூலிகை வனம் உள்ளது. அங்கு மதுரை வாய்ஸ் தொண்டு நிறுவனமும், பெனில் கல்வியியல் கல்லூரியும் இணைந்து சுய உதவிக்குழு பெண்களுக்கு மூலிகை குணம் பற்றிய 2 நாட்கள் பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்த பயிற்சி முகாமை திண்டுக்கல் வனச்சரக அதிகாரி சம்பத் தொடங்கி வைத்தார். தொண்டு நிறுவனர் முருகேசன் மற்றும் அழகர்கோவில் வனவர் ஜெயசீலன் கலந்துகொண்டு, பெண்களுக்கு மூலிகை செடிகளில்

உள்ள மருத்துவ குணமும், அதன் பயன்களையும் எடுத்துக்கூறினர். இதில் வனக்காப்பாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**காதலர் தினத்தையொட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி: பெங்களூர் ரோஜா ஒரு கட்டு ரூ.300க்கு விற்பனை**



காதலர் தினத்தையொட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால், பெங்களூர் ரோஜா விலை கடுமையாக உயர்ந்து உள்ளது.

காதலர்தினம்

பிப்ரவரி மாதம் 14–ந்தேதி அன்று ஆண்டுதோறும் 'காதலர் தின'மாக கொண்டாடப்பட்டு வருகிறது. அன்றையதினம் உலகம் முழுவதும் உள்ள காதலர்கள் ஒருவருக்கொருவர் ரோஜாப்பூ கொடுத்து தங்களது அன்பை பரிமாறிக்கொள்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். இன்னும் சில தினங்களில் காதலர் தினம் கொண்டாடப்பட உள்ளது. எனவே ரோஜாப்பூக்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஆயத்தப்பணிகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன. இதனால் மதுரை மாட்டுத்தாவணி பூ மார்க்கெட்டிற்கு பெங்களூர் வகை ரோஜாப்பூக்கள் வரத்து மிக மிக குறைந்த அளவிலேயே வருகின்றன. அதன்காரணமாக அவற்றின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

ஏற்றுமதி

இதுகுறித்து பூ வியாபாரிகள் கூறியதாவது:–

வருகிற 14–ந்தேதி காதலர் தினம் கொண்டாடப்பட உள்ளதால் ஓசூர் பகுதியில் உற்பத்தியாகும் ரோஜாப்பூக்கள் சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட ஏராளமான வெளிநாடுகளுக்கு

ஏற்றுமதி செய்யப்படுவது வழக்கம். இந்த ஆண்டும் டன் கணக்கில் ரோஜாப்பூக்கள் ஏற்றுமதி செய்யப்பட உள்ளன. இதனால் உள்ளூர் விற்பனையை கடந்த சில நாட்களாக விவசாயிகள் நிறுத்தி வைத்துள்ளனர். அதனால் பெங்களூர் வகை ரோஜாப்பூக்கள் குறைந்த அளவே வரத்து வருகின்றன.

<u>ஒரு கட்டு 300 ரூபாய்</u>

அவற்றின் விலை இன்றைய நிலவரப்படி (நேற்று) பெங்களூர் ரோஜா ஒரு கட்டு (20 பூக்கள் கொண்டது) ரூ.280 முதல் ரூ.300 வரை விற்பனை செய்யப்படுகின்றன. விழாக்களுக்கு ரோஜாப்பூக்களை பயன்படுத்த கூடுதலாக விலை கொடுத்து வாங்க வாடிக்கையாளர்கள் தயாராக இருந்தும் போதிய அளவு வரத்து இல்லாததால், பெங்களூர் ரோஜாவுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. இந்த நிலை 2 வாரங்களுக்கு நீடிக்கும் என தெரிகிறது. அதேபோன்று மல்லிகைப்பூ விலை சற்று குறைந்து உள்ளது. கடந்த சில வாரங்களாக ஒரு கிலோ ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது. இன்றைய நிலவரப்படி கிலோவுக்கு ரூ.400 வரை குறைந்து, ரூ.600–க்கு விற்பனையானது. மல்லிகைப்பூ வரத்து அதிகரிக்கத் தொடங்கி இருப்பதால் படிப்படியாக விலை குறையும் என்று தெரிகிறது.

## <u>வேளாண்மை தொழில் நுட்ப பயிற்சி மையம் அமைக்கப்படும் மத்திய உரத்துறை செயலாளர் தகவல்</u>



கீழ்கோத்தகிரியில்ரூ.48 லட்சம் செலவில் வேளாண்மை தொழில் நுட்ப பயிற்சி மையம் அமைக்கப்படும் என்று மத்திய உரத்துறை செய லாளர் சுர்ஜித்கே.சவுத்திரிதெரிவித்தார்.

கருத்தரங்கு

மத்திய வேதியியல் மற்றும் சிப்காட் நிறுவனத்தின் சார் பில் பிளாஸ்டிக் மறுசுழற்சி குறித்த கருத்தரங்கம் ஊட்டி யில் நேற்று நடைபெற்றது.

கருத்தரங்கிற்கு மாவட்ட கலெக்டர் சங்கர் முன்னிலை வகித்தார். இந்த கருத்தரங்கை மத்திய உரத்துறை செயலாளர் சுர்ஜித் கே.சவுத்திரி தொடங்கி வைத்து பேசியதாவது:- நரேந்திர மோடிபிரதமராக பொறுப்பு ஏற்றதும் மத்திய அரசின் செயலாளர்களை சந்தித்தார். அப்போது அவர் நீங்கள் முதன் முதலில் எங்கு பணிபுரிந்தீர்கள். அந்த பகுதி வளர்ச்சி அடைந்து உள்ளதா? என்பதை அறிந்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்க முயல வேண்டும் என்றார். குன்னூர் சப்-கலெக்டர் நான் முதன் முதலாக குன்னூரில் சப்-கலெக்டராகவும், அதனை தொடர்ந்து தமிழ் நாட்டில் பல்வேறு துறையில் அதிகாரியாகவும் பணிபுரிந்து உள்ளேன். தற்போது மத்திய அரசின் உரத்துறை செயலாள ராக உள்ளேன். முதல் கட்ட மாக நான் பணி செய்த இடம் நீலகிரி மாவட்டம் என்பதால் இந்த மாவட்டத்தில் பிளாஸ் டிக் சம்பந்தமான ஆய்வுகள் நடத்த திட்டமிட்டேன். பிளாஸ்டிக் குறித்து அரசு துறை அதிகாரிகள், தன்னார்வ தொண்டு அமைப்புகளுடன் விஜயவாடா, கர்நாடகா, ஜெய்ப்பூர் ஆகிய இடங்களில் பல்வேறு கருத்தரங்குகள் நடத்தப்பட்டு உள்ளன. இதே போல் தமிழகத்தில் சுற்றுலா பயணிகள் அதிகம் வரும் இடமாக ஊட்டி உள்ளதால் அதன் இயற்கை வளம், பசு மையை காக்க ஊட்டியில் தற்போது கருத்தரங்கு நடை பெறுகிறது.

பிளாஸ்டிக்மறுசுழற்சி

மனித வாழ்வில் பிளாஸ் டிக், வேளாண்மை, கட்டிடம், தகவல் தொடர்பு மற்றும் மருத்துவம், பாதுகாப்பு ஆகி யவை முக்கியத்துவம் வகிக்கி றது. தற்போதைய நிலையில் பிளாஸ்டிக் பொருட்களை ஒழிக்க முடியாது. எனவே அதனை மறு சுழற்சி முறையில் பயன்படுத்த வேண்டும். இந்த திட்டம் மூலம் வருமானம், வேலை வாய்ப்பு கிடைக்க உள்ளது. இந்த திட்டத்தில் ஊராட்சி, நகராட்சி, பேரூராட்சி, மாநக ராட்சிகள் ஈடுபட வேண்டும். தனிநபர் வங்கி கடன் பெற்று பிளாஸ்டிக் மறு சுழற்சி திட் டம் துவங்கினால் அதற்கான மானியம் மத்திய அரசு வேதி யியல் துறை

மூலம்வழங்கப்படும்.

தொழில்நுட்பபயிற்சிமையம்

இந்தியாவில் சராசரியாக 40 சதவீத பிளாஸ்டிக் கழிவு கள் மறுசுழற்சிக்கு பயன்படுத் தப்படுகிறது. மறுசுழற்சி மூலம் பிளாஸ்டிக் கழிவுகளை கொண்டு தரை விரிப்புகள், சூட்கேஸ், வீட்டின் கதவுகள் போன்ற பொருட்களை தயா ரிக்கலாம். எனவே பொது மக்கள் மக்கும் குப்பை, மக்காத குப்பைகள் குறித்து நன்கு தெரிந்து வைத்து இருக்க வேண்டும். நீலகிரி மாவட்டம் கீழ் கோத்தகிரியில் ரூ.48 லட்சம் செலவில் வேளாண்மை தொழில்நுட்ப பயிற்சி மையம் 25 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட உள்ளது. மிகவும் வறுமையில் சாலை யோரங்களில் பிளாஸ் டிக் பொருட்களை சேகரிக்கும் சிறுவர்களுக்கு பிளாஸ்டிக் மறு சுழற்சி பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இதன் மூலம் அவர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் வருமானம் பெற உரிய திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு

இதையடுத்து, மாவட்ட கலெக்டர் சங்கர் பேசும் போது கூறியதாவது:- நீலகிரி மாவட்டம் அழகான வனப் பகுதியும், வன உயிரினங்கள் கொண்ட சுற்றுலா இடமாக உள்ளது. எனவே குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பைகள் என தரம் பிரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. கேத்தி பேரூராட்சியில் பிளாஸ்டிக் பொருட்களை பிரித்து சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார். இந்த நிகழ்ச்சியில் பிளாஸ் டிக் மறு சுழற்சி குறித்து நடை பெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவி களுக்கு மத்திய உரத்துறை செயலாளர் சுர்ஜித் கே.சவுத் திரி பரிசுகளைவழங்கினார். விழாவில் மாவட்ட ஊராட்சி தலைவர் மேனகா, சிப்காட் நிறுவனத்தின் நிர் வாக இயக்குனர் டாக்டர் எஸ்.கே.நாயக், துணை இயக்குனர் சுகுமார், மாவட்ட வரு வாய் அதிகாரி பாஸ்கரபாண்டி யன் மற்றும் மாவட்ட அதி

காரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், தன்னார்வ தொண்டு அமைப்பினர் கலந்து கொண் டனர்.

**விவசாயிகள் நடவு செய்துள்ள நெற்பயிர்களை கலெக்டர் கணேஷ் ஆய்வு**

புதுக்கோட்டை, ஆவுடையார் கோவில், மணமேல்குடியில் விவசாயிகள் நடவு செய்துள்ள நெற்பயிர் களை கலெக்டர் கணேஷ் பார்வையிட்டு ஆய்வுசெய்தார்.

கலெக்டர்ஆய்வு

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் மற்றும் மணமேல்குடி ஊராட்சி ஒன் றியங்களில் வேளாண்மைத் துறையின் மூலம் விவசாயிகள் நடவு செய்துள்ள நெற்பயிர் களை கலெக்டர் கணேஷ் பார்வை யிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறியதாவது:- வேளாண்மைத்துறையின் மூலம் விவசாயிகளுக்கு நல்ல தரமான உயர்ரக நெல் விதைகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு வழங்கப் பட்ட நெல்விதைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ள விளைநிலங்கள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இதில் ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், திருப் பெருந்துறை ஊராட்சி, குளத் துக்குடியிருப்பு கிராமத்தில் உள்ள விவசாய நிலத்தில் எந்திரம் மூலம் அறுவடை செய்யப் படும் நெற்கதிர்கள் மற்றும் மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம், மஞ்சக்குடி கிராமத்தி பயிரிடப்பட்டு, அறுவைக்கு தயார் நிலையில் உள்ள நெற்கதிர்கள் ஆகியவை பார்வையிட்டு ஆய்வு செய்யப் பட்டது.

ரூ.600மானியம்

இந்த ஆய்வின் போது விவ சாயிகள் தங்கள் நிலங்களில் கதிரடிக்கும் எந்திரம் மூலம் அறுவடை செய்வது குறித்த விவரங்களை அதற்குரிய படிவங்களில் உரிய முறையில் பூர்த்தி செய்து தங்களது பகுதிகளில் உள்ள வட்டார வேளாண்மை மையத்தில் வழங்கி அரசு வழங்கும் 1 ஏக்கருக்கு ரூ.600 மானியம் பெற விவசாயிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். இந்த ஆய்வின் போது இணை இயக்குனர் (வேளாண்மை) ஷாஜகான், துணை இயக்குனர் (மீன்வளத்

துறை) சர்மிளா, உதவி இயக்குனர் சேகர், வேளாண் உதவி இயக்குனர்கள் அடைக்கப்பன், பெரியசாமி, மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

## ஆந்திரா, ஒடிசா மாநிலங்களில் இருந்து 5 ஆயிரம் டன் புழுங்கல் அரிசி தஞ்சை வந்தது



ஆந்திரா, ஒடிசா மாநிலங்களில் இருந்து 5 ஆயிரம் டன் புழுங்கல் அரிசி நேற்றுதஞ்சைக்குவந்தது.

மத்தியதொகுப்பு

மத்திய தொகுப்பில் இருந்து பொதுவினியோகத்திட்டத்தின் கீழ் வழங்குவதற்காக தமிழகத்திற்கு புழுங்கல் அரிசி, பச்சரிசி, கோதுமை போன்றவை வழங்கப்பட்டு வருகின்றன. இவைகள் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பின்னர் பொதுவினியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.இதைப்போல் தஞ்சை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, அரியலூர் மாவட்டங்களுக்கு வழங்குவதற்காக மத்திய தொகுப்பில் இருந்து வரும் அரிசி மூட்டைகள் தஞ்சையில் உள்ள மத்திய சேமிப்புக்கிடங்கில் இருப்பு வைக்கப்பட்டு பின்னர் லாரிகள் மூலம் எடுத்துச்செல்லப்பட்டு வழங்கப்படும்.

புழுங்கல்அரிசி

இந்த நிலையில் நேற்று ஆந்திர மாநிலம் நல்கொண்டாவில் இருந்து 41 சரக்கு ரெயில்பெட்டிகளில் இருந்து 2,550 டன் புழுங்கல் அரிசி நேற்று தஞ்சை வந்தது. இதே போல் ஒடிசா மாநிலம் சம்பல்பூர் மாவட்டம் அட்டபிரா பகுதியில் இருந்த 42 சரக்கு ரெயில் பெட்டிகளில் 2 ஆயிரத்து 600 டன் புழுங்கல் அரிசியும் தஞ்சை வந்தது. தஞ்சைக்கு நேற்று ஒரே நாளில் மட்டும் 5 ஆயிரத்து 150 டன் புழுங்கல் அரிசி வந்தது. இந்த அரிசி

மூட்டைகள் லாரிகளில் ஏற்றப்பட்டு தஞ்சையில் உள்ள மத்திய சேமிப்பு கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு இருப்பு வைக்கப்பட்டன. பின்னர் அங்கிருந்து லாரிகளில் எடுத்துச்செல்லப்பட்டு பொது வினியோகத் திட்டத்தின் மூலம் வினியோகிக்கப்பட உள்ளது.